நல்லூர் கிளை நூலகம்
யாழ்ப்பாணம்

Registered as a News Paper    மக்கங்கள் 04    விலை ரூபா: 5-00

# ஈழநாதம்

THE EELANAATHAM    Peoples Daily    மக்கள் தினசரி

நாதம்: 03    திருவள்ளுவர் ஆண்டு 2023    பங்குனி 09    ( 22 - 03 - 1992 )    ஞாயிற்றுக்கிழமை    ஓசை: 33

## மாணவர் சமுதாயத்திற்கு பொறுப்புணர்ச்சி தேவை

நெருக்கடியான சூழ்நிலையில் எமது இனம் போர் அழிவை எதிர்நோக்கிக் கொண்டிருக்கும் ஆபத்தான நேரத்தில போராளிகள் மண்மீட்பு போரில் உயிர்த் தியாகம் செய்து கொண்டிருக்கும் இவ்வேளையில் அன்னைபூபதியின் மகத்தான தியாகத்தை மக்கள் நினைவு கூரும் இச்சந்தர்ப்பத்தில் மாணவர் சமுதாயம் மிகவும் பொறுப்புணர்வுடன் நடந்து கொள்வார்களென எதிர்பார்க்கிறோம் என்று விடுதலைப்புலிகள் மாணவர் இயக்கம் வெளியிட்டுள்ள துண்டுப் பிரசுரமொன்றில் கூறப்பட்டுள்ளது. இத்துண்டுப் பிரசுரத்தில் மேலும் மாணவர்களில் சிலர் கடந்த சில நாட்களாக வீதிகளிலும். பொது இடங்களிலும் கூடிநின்று கும்மாளம் அடிப்பதும், பண்பாட்டுச் சீரழிவுக்கு [4 ஆம் பக்கம் பார்க்க]

### பொலநறுவையில்

# புலிகள் திடீர் தாக்குதல்

# 7 படை பலி; பலர் படுகாயம்

(கொழும்பு)

பொலநறுவ மாவட்டம் பாலதுர என்னும் இடத்தில் விடுதலைப் புலிகள் மேற்கொண்ட அதிரடித் தாக்குதல் ஒன்றில் ஏழு இராணுவத்தினர் கொல்லப்பட்டனர்; பலர் படுகாயமடைந்தனர் என சிறிலங்கா பாதுகாப்பு வட்டாரங்களை மேற்கோள்காட்டி ஏஜென்சி செய்திகள் தெரிவிக்கின்றன.

நேற்றுக்காலை சுமார் 9.30 மணியளவில் ஆரம்பித்து 45 நிமிடங்கள்வரை இம்மோதல் இடம் பெற்றதாகவும் இம் மோதல் இடம்பெற்ற பகுதி அடர்ந்த காட்டின் எல்லை ஓரம் எனவும் அச் செய்திகள் மேலும் தெரிவித்தன.

## கண்ணிவெடியை அகற்றிய சிப்பாய் பலி; இருவர் காயம்

[மட்டக்களப்பு]

பெரிய போரதீவு பழுகாமம் வீதியில் இராணுவத்தினருக்கு புலிகள் வைத்த கண்ணிவெடியினை பரிசோதனை செய்யச் சென்ற படையினர் சந்தேகத்தின் பேரில் நிலத்தைத் தோண்டிப் பார்த்த போது பெருமளவு மின் கம்பிகள் காணப்பட்டதனால் அவற்றை அகற்றமுயன்ற போது மின் சாரம் தீண்டியதனால் ஒரு இராணுவ வீரர் ஸ்தலத்திலேயே கொல்லப்பட்டார்.

மற்றும் இருவர் தூக்கியெறியப்பட்டு படுகாயங்களுக்குள்ளாகினர்.

## துப்பாக்கி சூட்டிற்கு பெண் காயம்

[யாழ்ப்பாணம்]

மாவிட்டபுரம் பகுதியில் நிலை கொண்டுள்ள சிறிலங்கா இராணுவத்தினர் நேற்றுக் காலை காவலரணில் இருந்து குடியிருப்புக்களை நோக்கி துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டதில் ஒருவர் காயமடைந்தார்.

சிறிலங்கா இராணுவத்தினரின் கண்மூடித்தனமான துப்பாக்கிப் பிரயோகத்தினால் திருமதி செல்லமணி நாகரத்தினம் [தெல்லிப்பளை கிழக்கு] என்கின்ற பெண்மணியே காயமடைந்தவராவார். இவர் நேற்று யாழ். வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டார். [பா]

## முல்லையில் குண்டு வீச்சு குடியிருப்புக்கள் சேதம்

[ஒட்டிசுட்டான்]

முல்லைத்தீவுப் பகுதியில் சிறிலங்கா விமானப்படை விமானங்கள் பொதுமக்கள் குடியிருப்பு பகுதிகளில் பலத்த குண்டுவீச்சுத் தாக்குதல்களை நடத்தியுள்ளன. நேற்றுப் பகல் முல்லைத்தீவு பிரதான வீதியிலுள்ள ஒட்டிசுட்டான் ... தலினால் சிவபாத சுந்தரம் பாலசுப்பிரமணியம், நாகரத்தினம் ஆகியஇருவரது வீடுகள் முற்றாகச் சேதமடைந்துள்ளன. முத்தையன் கட்டுப் பகுதியில் மதியாபரணம் என்பவரது வீடும் பலத்த சேதமடைந்துள்ளது. மேலும் பல வீடுகளும், பொதுமக்களின்

## பேயாடி கூழாங்குளத்தில் படைக்கு பலத்த சேதம்

### — சுதாகர் வீரமரணம்

(வவுனியா)

வவுனியாவில் பேயாடி கூழாங்குளம் பகுதியில் புலிகள் நேற்றுக்காலை நடத்திய தாக்குதலில் சிறிலங்கா இராணுவத்தினர் பலத்த இழப்புகளை சந்தித்துள்ளனர்.

நேற்றுக்காலை எட்டு முப்பது மணியளவில் பேயாடி கூழாங்குள இராணுவ முகாம் பகுதியிலிருந்து இராணுவ அணியொன்று வீதித் தடைகளை அகற்றுவதற்காக முன்னேறி வந்தது. முன்னேறிய இராணுவ அணியை முப்பது யார் தூரத்தில் வைத்து விடுதலைப்புலிகள் தீவிரமாகத் தாக்கினர் அத் தீவிரத் தாக்குதலின் பின்னர் பலத்த இழப்புக்களோடு இராணுவத்தினர் முகாமிற்கு பின்வாங்கியுள்ளனர்.

இத்தாக்குதலில் விடுதலைப் புலிகள் தரப்பில் லெப். சுதாகர் (தில்லையம்பலம் திருப்பரமன் கல்மடு வவுனியா) என்பவர் வீரச்சாவைத் தழுவிக் கொண்டுள்ளார். இவருக்கு விடுதலைப்புலிகள் வீர வணக்கம் செலுத்தியுள்ளனர்.

## மணலாற்றில்

## யுத்தநிறுத்தம் செய்க; குடியேற்றத்தை நிறுத்துக

### கிறிஸ்தவ குழு அரசை வற்புறுத்து

(கொழும்பு)

சிறிலங்கா அரசாங்கம் போர்நிறுத்தம் செய்வதோடு, தமிழர் பிரதேசங்களில் சிங்களக் குடியேற்றங்களையும் உடன் நிறுத்த வேண்டும் எனவும் யாழ். வந்து திரும்பிய கிறிஸ்தவ நல்லெண்ண தூதுக் குழு சிறிலங்கா அரசை வற்புறுத்தியுள்ளது.

அண்மையில் யாழ்ப்பாணம் வந்த கிறிஸ்தவ கவுன்சில் எனப்படும் சபையின் நல்லெண்ணத் தூதுக் குழுவினர் இனப் பிரச்சினை தொடர்பான பல தரப்பு விவகாரங்களையும் புலிகளுடன் கலந்து பேசினர். இதன் பின்னர் கொழும்பு திரும்பிய நல்லெண்ணக் குழுவினரே சிறிலங்கா அரசை மேற்கண்டவாறு வற்புறுத்தியுள்ளனர்.

## கல்வி அதிகாரி நியமனம்; மீளப் பரிசீலிக்க கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்டத்தில் வளர்ந்தோர் கல்வி அதிகாரியின் கடமைகளைக் கவனிக்கும் பொறுப்பிற்கு மத்திய கல்வி அமைச்சு எஸ். சி. எஸ். சிதம்பரநாதனை நியமித்துள்ளது. 1-12-91 இல் இருந்து செயற்படும்படியாக வழங்கப்பட்ட [4 ஆம் பக்கம் பார்க்க]

## இனவாத வன்முறைக்கு எதிராய் லண்டனில் ஊர்வலம்

(லண்டன்)

வெள்ளையரின் இனவாத வன்முறைச் சம்பவங்களுக்கு எதிராக எதிர்வரும் 28 ஆம் திகதி லண்டனில் நீதிக்கான ஊர்வலம் ஒன்றுநடத்துவதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

இந்தஊர்வலத்துக்கான ஏற்பாடுகளை சகிதரன் ஞாபகார்த்த குழு, டீன் குடும்பம் பாதுகாப்புக்குழு மற்றும் நியூகாம் மொனிடரிங் புரஜெக்ட் ஆகிய அமைப்புகள் ஒழுங்கு செய்திருக்கின்றன.

இக்குழுக்கள் இந்தஊர்வலம் தொடர்பாக வெளியிட்டுள்ள அறிக்கையில், இலங்கையில் ஏற்பட்ட இன்னல்களில் இருந்து தப்பி வந்த தமிழ் அகதியான 28 வயது [4 ஆம் பக்கம் பார்க்க]

## சிறிலங்கா மீனவர்கள் மாலைதீவால்தடுத்துவைப்பு

மாலைதீவுக் கடற்பரப்பில் மீன் பிடிப்பதில் ஈடுபட்டிருந்த ஐந்து சிறிலங்கா மீன்பிடிப் படகுகள் மாலைதீவு அதிகாரிகளால் தடுத்து வைக்கப்பட்டுள்ளன.

கடந்த வருடமும் இதே போல சிறிலங்கா மீனவர்கள் பெருமளவில் மாலைதீவுக் கடலில் சட்டவிரோதமாக மீன் பிடித்ததையடுத்து மாலைதீவு அதிகாரிகளால் கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டது தெரிந்ததே.

எனினும் இ போது மாலைதீவு அதிகாரிகளால் தடுக்கப்பட்ட மீன்பிடிப்படகுகள் மாலைதீவுக்கரையிலிருந்து பத்து மைலுக்கும் குறைவான தூரத்திலேயே மீன் பிடித்துக் கொண்டிருந்ததாக மாலைதீவு அதிகாரிகள் கூறியுள்ளனர்.

நடத்தியுள்ளன. நேற்றுப் பகல் முல்லைத்தீவு பிரதான வீதியிலுள்ள ஒ-டி சுட்டான் என்னுமிடத்தில சிறிலங்கா குண்டுவீச்சு விமானங்கள் சரமாரியான தாக்குதல்களை நடத்தியுள்ளன. இத் தாக்கு பவரது வீடும் பலத்த சேதமடைந்துள்ளது. மேலும் பல வீடுகளும், பொதுமக்களின் உடைமைகளும் இக்குண்டு வீச்சுக்களால் பாதிக்கப்பட்டுள்ளன.

## பொன்னாலை நோக்கி பலத்த எறிகணை வீச்சு

(யாழ்ப்பாணம்)

காரைநகர் பகுதியில் நிலை கொண்டுள்ள சிறிலங்கா இராணுவத்தினர் மக்கள் குடியிருப்புகளை நோக்கி இருமணி நேரம் தொடர்ச்சியான எறிகணைத்தாக்குதலை மேற்கொண்டனர்.

நேற்று முன் தினம் இரவு எட்டு மணிமுதல் பத்துமணி வரை ஏவப்பட்ட இந்த எறிகணைகள் பொன்னாலை, மூளாய், திருவடிநிழல் பகுதிகளில் வீழ்ந்து வெடித்தன. கடற்கரையை அண்டிய பகுதிகளிலும், வயல் வெளிகளிலும் இவை வீழ்ந்து வெடித்ததனால் எதுவித உயிரிழப்புகளும் ஏற்படவில்லை. [க,ச]

### தொண்டமானை அரசாங்கம்

## பதவிநீக்கும் என எதிர்பார்க்க முடியாது

(கொழும்பு)

அரசாங்கம் அமைச்சர் தொண்டமானைப் பதவியில் இருந்து நீக்கும் என்று நாம் எதிர்பார்க்க முடியாது. ஏனெனில் அவருக்குப் பின்னால் பத்து லட்சம் வாக்காளர்கள் இருக்கின்றார்கள். எனவே நாட்டைப் பாதுகாக்க அனைவரும் இணைய வேண்டும் என்று முன்னாள் அமைச்சரும், சிங்கள ஆராய்ச்சிய பெரமுனவின் தலைவருமான காமினி ஜயசூரியா அறைகூவல் விடுத்தார்.

இரத்தினபுரிப் பகுதியில் நடைபெற்ற பொதுக் கூட்டமொன்றில் பேசிய அவர் மேலும் கூறுகையில், பிரித்

[4 ஆம் பக்கம் பார்க்க]

## எதிர்க்கட்சிப் பாதயாத்திரை வீதியால் செல்லத்தடை

(கொழும்பு)

சிறிலங்கா பாராளுமன்ற எதிர்க் கடசிகள் மேறகொள்ளும் பாதயாத்திரை வீதியால் செல்ல அரசு தடைவிதித்துள்ளது. இதனால் நடைபாதையால் பாதயாத்திரை தொடர்வதாக பி.பி.சி. தன் சிங்கள சேவையில் தெரிவித்தது.

எதிர்க்கட்சித் தலைவர் அனுரா பண்டாரநாயக்கா சந்திரிகா குமாரணதுங்க, மைந்தராஜபக்ச, வாசுதேவ நாணயக்கார உட்பட ஏனைய பாராளுமன்ற எதிர்க்கட்சி உறுப்பினர்களும் மாகாண சபை எதிர்க்கட்சி அங்கத்தவர்களும் கலந்து கொண்டுள்ள இப் பாதயாத்திரை நேற்றுக் காலியிலிருந்து தொடர்ந்தது. பல கோரிக்கைகளை முன் வைத்து நடாத்தப்படும் இப் பாதயாத்திரைக்கு நாளாந்

[4 ஆம் பக்கம் பார்க்க]

கப்பட்டார். [பா]

### வீரச்சாவு



### தங்கப்பன்

(யாழ்ப்பாணம்)

மணலாறு கொக்குத்தொடுவாயில் கடந்த17-03-92 அன்று சிறிலங்கா இராணுவத்துடன் நடைபெற்ற மோதலில் வீரவேங்கை தங்கப்பன் (கந்தையா-சுரேந்திரன், மாங்கேணி வாழைச்சேனை) வீரச்சாவைத் தழுவிக்கொண்டார். இவருக்கு புலிகள் தமது வீர வணக்கத்தைச் செலுத்தியுள்ளனர்.

இம் மோதலில், முப்பதிற்கு மேற்பட்ட இராணுவத்தினர் கொல்லப்பட்டமையும், பல நவீன ஆயுதங்களையும் புலிகள் கைப்பற்றியமையும்தெரிந்ததே.

## போட்டியிடுவோர் அதிகரிப்பு

இலங்கைச் செஞ்சிலுவைச் சங்க யாழ். கிளைத் தேர்தலில் போட்டியிடுபவர்களின் தொகை முன்னையைவிட இம் முறை அதிகரித்துள்ளது.

தலைவர் பதவிக்கு நான்கு பேர்களும் செயலாளர் பதவிக்கு ஐந்து பேர்களும் பொருளாளர் பதவிக்கு மூன்றுக்கு மேற்பட்டோரும் உபதலைவர் பதவிக்குநாலு பேரும் போட்டியிடுகின்றார்கள். (75)

# விமானப்படை தொடர்ந்து அனர்த்தம்; இதுவரை 45 படை பலி: 100 காயம்

[மணலாறு]

மணலாறு மாவட்டத்தின் பல பகுதியிலும் சிறிலங்கா விமானங்கள் இரவு பகல் வேறுபாடு இன்றி பலத்த குண்டுத் தாக்குதலை நடத்தி வருகின்றன. இதேவேளை கடற்படை பீரங்கித் தாக்குதலும் முகாம்களிலிருந்து பலத்த எறிகணை வீச்சும் நடத்தப்பட்டு வருகின்றன.

இதே வேளை. விடுதலைப் புலிகளுக்கும், சிறிலங்கா இராணுவத்தினருக்கும் இடையில் கடந்த பதினேழாந் திகதிக்குப் பின்னர் ஏற்பட்ட மோதலில் இதுவரை குறைந்தது 45 இராணுவத்தினர் கொல்லப்பட்டனர். 100 பேருக்கு மேல் காயமடைந்தனர். ஆறு கனரக வாகனங்கள புலிகளால் அழிக்கப்பட்டுள்ளன. ஐந்தாவது நாளாக நேற்றும்மோதல்கள் இடம்பெற்றன,

குண்டு வீச்சில் வை 12 வை 8. விமானங்கள்உட்பட குண்டு வீச்சு விமானங்களும் உலங்கு வானூர்திகளும் பயன்படுத்தப்படுகின்றன. காட்டுப்பகுதியில் தொடர்ந்து நடைபெறும் பலத்த குண்டுவீச்சால், காடே அதிர்ந்த வண்ணம் உள்ளது.

இதேவேளை கொக்குத் தொடுவாய்க்கும் நாயாறுக்கும் இடைப்பட்ட கரையோரப் பகுதியில் கடற்படைப் பீரங்கிப்படகுகளில் இருந்து கண்மூடித்தனமான பீரங்கித் தாக்குதல்கள் நிகழ்ந்த வண்ணமுள்ளன அத்தோடு அப்பகுதியில் உள்ள இராணுவ முகாம்களில் இருந்து எறிகணைத் தாக்குதல்கள் பலமாக இடம் பெற்ற வண்ணமுள்ளன.

இதேவேளை மணலாற்றுச் சண்டையில் காயமடைந்த, இறந்த இராணுவத்தினர் வவுனியாவுக்கும் அங்கிருந்து அனுராதபுரம். கொழும்பு ஆகிய இடங்களுக்கும் கொண்டு செல்லப்படுகின்றனர் மணலாற்றுபோரில் காயமடையும் இராணுவத்தை ஏற்றிச் செல்வதற்கு என இரத்மலானை விமானப்படைத்தளத்தில் பத்து அம்புலன்ஸ் வண்டிகள் நிரந்தரமாக நிறுத்தி வைக்கப்பட்டுள்ளன.

## பிரி. றோகான்தளுவத்த 'கஜபார'விற்கு தலைமை

[கொழும்பு]

தற்போது மணலாறு மாவட்டத்தில்மேற்கொள்ளப்படும் ''ஒப்பரேஷன் கஜபார'' இராணுவ நடவடிக்கைகள் பிரிகேடியர் றோகான் தளுவத்தவின் நேரடிக் கண்காணிப்பின் கீழேயே தொடர்வதாகவும் வடபிராந்திய இராணுவத் தளபதி மேஜர் ஜெனரல் டென்சில் கொப்பேகடுவவின் அனுமதியுடன் தந்திரரீதியான மாற்றங்கள் மட்டும் செய்யப்படுவதாகவும் தெரிய வருகிறது.

## செஞ்சிலுவைத் தலைவர் வாக்குரிமை இழப்பு

(யாழ்ப்பாணம்)

இலங்கைசெஞ்சிலுவைச்சங்க யாழ் கிளையின் தற்போதைய தலைவர். பொருளாளர் ஆகியோர் எதிர்வரும் தேர்தலில் வாக்களிக்கும் உரிமையை இழந்துள்ளனர்.

மேற்படி தேர்தலில் வாக்களிக்கும் உரிமையைப் பெற வேண்டுமானால் இவர்கள் தமது உதவி அரசாங்க அதிபர் பிரிவு செஞ்சிலுவைச் சங்கக் கிளையில் சக உறுப்பினர்களால் தெரிவு செய்யப்படல் வேண்டும். ஆனால் இவ்விருவரும் நல்லூர் உதவி அரசாங்க அதிபர் பிரிவு செஞ்சிலுவைச் சங்கக் கிளையிலிருந்து தெரிவு செய்யப்பட்ட முப்பது பேருக்குள் தெரிவு செய்யப்படாததனாலேயே வாக்களிக்கும் உரிமையை இழந்துள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

## தேர்தலுக்கான வாய்ப்பு இப்போது இல்லை

### — பிரட்மன்

(கொழும்பு)

இலங்கை ஒரு பொதுத்தேர்தலைச் சந்திப்பதற்கான சாத்தியக் கூறுகள் இல்லை என சிறிலங்காஜனாதிபதியின்சர்வதேச விவகாரங்களுக்கான ஆலோசகர் பிரட்மன் வீரக்கோன் தெரிவித்தார்.

அவர்மேலும்கருத்துத் தெரிவிக்கையில் தேர்தலை நடத்துவதற்குநிதிப்பற்றாக்குறையும். நாட்டில் முழுமையான ஒரு பொதுந் தேர்தலை நடாத்த பாதுகாப்பு வழங்க முடியாமையுமே காரணம் எனவும் தெரிவித்தார்.

அதேவேளை எதிர்க்கட்சியி

[4 ஆம் பக்கம் பார்க்க]

### அன்னை பூபதி நினைவுநாள்

## இன்றைய கூட்டமும் உண்ணா விரதமும்

(யாழ்ப்பாணம்)

தியாகச் சுடர் அன்னை பூபதி அவர்களின் நாலாம் நாள் அடையாள உண்ணா விரதமும் நினைவுக் கருத்தரங்குகளும் கலை நிகழ்ச்சிகளும் இன்று வலிகாமம் வடக்கில் நடைபெறவுள்ளன.

நெல்லிப்பளை வட்டவைப் பிரதேச அன்னை பூபதியின் நான்காவது ஆண்டு உண்ணா நோன்பு நிகழ்வுகள் அளவெட்டி அருணோதயாக் கல்லூரியில் நடைபெறவுள்ளன காலை எட்டுமணி முதல்

[4 ஆம் பக்கம் பார்க்க]

## வரி விளம்பரம்


**ஜோதிட விஞ்ஞானம்**

ஜெனன ஜாதகங்கள் விஞ்ஞான ரீதியாக கணிப்பதற்கும், ரேகை சாஸ்திரம், எண் ஜோதிடம் திருமணப் பொருத்தங்கள் பார்ப்பதற்கும் காலையிலே நேரில் வரவும். Prof. சத்தியதாஸன் (Mech. E) ஞானம் ஸ்ரோஸ், சித்தன் கேணி. (2319)


## வாராந்தக் கருத்தரங்கு

(யாழ்ப்பாணம்)

விடுதலைப் புலிகளின் கலை பண்பாட்டுக் கழகத்தின் ஆதரவில் பிரதி ஞாயிறு தோறும் நடைபெறும் வாராந்தக் கருத்தரங்கில் இன்று (22-03-92) ஞாயிற்றுக்கிழமை நடைபெறும் கருத்தரங்கு காலை 10-00 மணிக்கு கோண்டாவிலிலுள்ள கலை பண்பாட்டுக் கழக தலைமைச் செயலகத்தில் நடைபெறுகின்றது.

இவ்வார அமர்வில் திரு. டானியல் அன்ரனி அவர்கள் 'எனது கலை இலக்கிய அனுபவங்கள்' என்ற பொருளில் கருத்துரை ஆற்றுவார்.

## வாக்காளர் செல்வாக்கு அதிகரிப்பு

[யாழ்ப்பாணம்]

இலங்கைச் செஞ்சிலுவைச் சங்க யாழ். கிளைத் தேர்தலில் போட்டியிடுபவர்கள் வாக்களிக்கும் அங்கத்தவர்களுக்கு மிகவும் செல்வாக்கு செய்கின்றார்கள்.

இது பற்றி மேலும் தெரிய வருவதாவது, 29 ஆம் திகதி நடைபெறப் போகும் தேர்தலில் தாம் நிர்வாகத்திற்கு வர வேண்டும் என்ற நோக்கில் அங்கத்தவர்களுக்கு உணவுப் பண்டங்கள் பெருமளவில் வாங்கிக்கொடுக்கப்படுகின்றது என அறியப்படுகின்றது.

## நவீனப்படுத்த திட்டமாம்

காங்கேசன் துறையிலுள்ள துறைமுகத்தை விரைவில் நவீனமயப்படுத்தி அபிவிருத்தி செய்வதற்கான வேலைததிட்டம் பற்றிய அறிக்கையொன்று இன்னும் இரு வாரகாலத்தில் சிறிலங்கா ஜனாதிபதி ஆர் பிரேமதாசாவிடம் சமர்ப்பிக்கப்படும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# நினைவு கூருகின்றோம்...

# 1992. 03. 22

1985 ஆம் ஆண்டு இதே தினத்தில் மட்டக்களப்பு அமிர்தகழிப் பகுதியில் சிறிலங்கா அதிரடிப்படையினர் மேற்கொண்ட முற்றுகையின் போது வீரச்சாவெய்திய

**சிந்து** (தம்பிராசா லோகநாதன் - ஏறாவூர் மட்டக்களப்பு)

இதே சம்பவத்தில் சயனைட் உட்கொண்டு வீரச்சாவெய்திய

**பரணி** (சீவரட்ணம் டேவிற் அற்புதராஜன் - அமிர்தகழி, மட்டக்களப்பு)

மட்டக்களப்பு, கல்லாறுப் பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினர் மேற்கொண்ட திடீர்த் தாக்குதலின் போது சயனைட் உட்கொண்டு வீரச்சாவெய்திய

**சீலன்** (ஆறுமுகம் வேதாரணியம் - முகத்தான்குளம், செட்டிகுளம்)

செட்டிகுளம் பகுதியில் சிறிலங்காப் படையினர் மேற்கொண்ட முற்றுகையின் போது சயனைட் உட்கொண்டு வீரச்சாவெய்திய

**சஞ்சீவி** (தங்கராசா நடராசா - கலகங்குளம், செட்டிகுளம்)

1987 ஆம் ஆண்டு கிளிநொச்சி, ஸ்கந்தபுரம் பகுதியில் சிறிலங்காப் படையினர் மேற்கொண்ட சுற்றிவளைப்பின்போது ஏற்பட்ட மோதலில் வீரச்சாவெய்திய

**வினோத்** (ஆறுமுகம் வீரசிங்கம் -வன்னேரிக்குளம், கிளிநொச்சி)

**வசந்தன்** (இராமையா யோகராசா - கோணாவில், கிளிநொச்சி)

இதே சம்பவத்தின்போது காயமுற்ற நிலையில் சயனைட் உட்கொண்டு வீரச்சாவெய்திய

**லெப். சஞ்சீவி | மீசை** (செல்லப்பா கெங்காதரன் - 8ஆம் கட்டை மல்லாகம், தெல்லிப்பழை)

வசாவிளானில் சிறிலங்காப்படையினருடனான மோதலில் வீரச்சாவெய்திய

**றொபின்** (கந்தையா நாகரத்தினம் - கீரிமலைவீதி, பண்டத்தரிப்பு)

1988ஆம் ஆண்டு உடையார்கட்டுப் பகுதியில் இந்தியப்படையினர் மேற்கொண்ட முற்றுகையின் போது ஏற்பட்ட மோதலில் வீரச்சாவெய்திய

**லெப். துர்க்கா** (கமலாதேவி சச்சிதானந்தம் -புதுக்குடியிருப்பு,முல்லைத்தீவு)

முத்தயன்கட்டில் இந்தியப்படையினர் பதுங்கியிருந்து மேற்கொண்ட தாக்குதலில் வீரச்சாவெய்திய

**லெப். மரியதாஸ் | சந்திரன்** (சிங்கராஜர் மரியதாஸ் - 'சகாயபவனம்' கோயில் குடியிருப்பு, சாவகச்சேரி)

கொறவப்பொத்தானையில் இந்தியப்படையினரால்பேருந்திலிருந்துஇறக்கப்பட்டு படுகொலை செய்யப்பட்ட 17 தமிழர்கள்

முல்லைத்தீவு தண்டுவான் பகுதியில் இந்தியப்படையினர் மேற்கொண்ட எறிகணைத்தாக்குதலில் கொல்லப்பட்ட ஒரே குடும்பத்தைச்சேர்ந்த 6 தமிழர்கள்

பம்பைமடுவில் இந்தியப்படையினரால் படுகொலை செய்யப்பட்ட தமிழ்ப் பொதுமகன்.

1989ஆம் ஆண்டு வட்டமடுப்பகுதியில் தேசவிரோத சக்திகள் மேற்கொண்ட தாக்குதலில் வீரச்சாவெய்திய

**கப்டன் சத்தியன்** (ஞானமுத்து சிவானந்தராசா - தாண்டியடி திருக்கோயில், அம்பாறை]

மட்டக்களப்பு வாழைச்சேனைப் பகுதியில் இந்தியப்படையினர் மற்றும் தேசவிரோதசக்திகள் மேற்கொண்ட துப்பாக்கிச்சூட்டில் வீரச்சாவெய்திய

**2 ஆம் லெப். மேகன்** (சீனித்தம்பி தயானந்தன் - கல்குடா, வாழைச்சேனை மட்டக்களப்பு)

இதே ஆண்டு இந்தியப்படையினருடனான மோதலில் வீரச்சாவெய்திய

**கப்டன் கைலன் | கேதீஸ்** (கதிரவேல் முத்துராஜா - இத்திக்கண்டல், அடம்பன் மன்னார்)

நாயாற்றுப்பகுதியில் இந்தியப்படையினருடனான மோதலில் வீரச்சாவெய்திய

**2ஆம் லெப். கிர்மானி** (ஏகாம்பரம் உதயகுமார் - 129, கொழும்புத் துறை வீதி, யாழ்ப்பாணம்)

1990 ஆம் ஆண்டு யாழ்ப்பாணத்தில் மூளைக்காய்ச்சல் நோயின் காரணமாக எம்மைப் பிரிந்த

**விசைவீரன் | மந்திரி** (அருளய்யா அருள்நேஸ்வரன் - காரைநகர்)

1991 ஆம் ஆண்டு மன்னார் சிலாபத்துறைப்பகுதியில் சிறிலங்காப்படை முகாம் தகர்ப்பின் நான்காம்நாள் யுத்தத்தில் வீரச்சாவெய்திய

**கப்டன் பாஸ்க்கர்** (செ. ரவீந்திரன் பள்ளங்கோட்டை, நானாட்டான், மன்னார்.)

**லெப் சுகந்தன்** (இம்மானுவேல் பீற்றர் யோகேந்திரன் - நறுவிலிக்குளம், மன்னார.)

**லெப். டெனிக்** (சுந்தர் குகதாசன் - மிருசுவில் வடக்கு.)

**உசான்** (சந்தானம் தேவநாயகம் - பளை.)

**லெப். சுரேந்தர்** (பொன்னுப்பிள்ளை பாலதாஸ் - பரிகாரிகண்டால், முருங்கன், மன்னார்.)

**லெப். பரணி** (செல்லத்துரை தவராசா - கெற்பலி, மிருசுவில்.)

**லெப். றொபேட்** (குலநாதன் குலமோகன் - அளவெட்டி தெற்கு.)

**2 -ம் லெப். பஸ்ரி** (பிரான்சிஸ் யேசுதாசன் - (சூசை) வங்காலை, மன்னார்.)

**சூரியகுமார்** (கனகராசா விக்னேஸ்வரன் - புத்தூர் மேற்கு.)

**மது** (இம்மானுவேல் சுரேஷ் - மணற்காடு, குடத்தனை.)

**ஜெய்லான்** (இரத்தினகுலசிங்கம் மொறிஸ் நிமலன் - கிளாலி.)

**ராஜு** (குமாரசாமி சிவநாதன் - 525, காதி அபூபக்கர் வீதி, யாழ்ப்பாணம்.)

**பப்பா** (இராசலிங்கம் பத்மலிங்கம் - மாகியப்பிட்டி, சண்டிலிப்பாய்.)

**பரமசிவன்** (கிருஷ்ணகோபால் வசந்தகுமார் - மட்டுவில் நாடு, கிழக்கு, பூநகரி.)

**பாலசுந்தரம்** (முத்துப்பிள்ளை சிவலிங்கம் - விபுலானந்தவீதி, வாழைச்சேனை, மட்டக்களப்பு.)

**சேகரன்** (தர்மலிங்கம் இம்மானுவேல் இராஜேஸ்வரன் - முழங்காவில், மன்னார்.)

**சந்திரகாந்** (காளியப்பு ஈரஜி-தம்பலகமம், திருக்கோணமலை.)

**இரத்தினம்** (அந்தோனிப்பிள்ளை மரியநாயகம் -முருங்கன்பிட்டி,மன்னார்)

**ஜெறோம்** (நடராசா சகாயராசா - சிறுநாவற்குளம், மன்னார்.)

**சூட்டி** (நல்லையா நவரத்தினம் -)

**மதனன்** (முருகேசு கமலகாசன் - கச்சாய் வடக்கு, கொடிகாமம்.)

**நவீனன்** (வீரசிங்கம் சபேசன்.)

**கலாதரன்** (வினாயகமூர்த்தி சிவனேஸ் - திருக்கோணமலை.)

**ராவ்** (தோமஸ் பத்திநாதன் - கற்பிட்டி, புத்தளம்.)

**உத்தமன்** (பழனியாண்டி வேலு - தலவாக்கொல்லை.)

**மணிமுடி** (பாலசிங்கம் கிரிதரன் - டச்சுவீதி, அளவெட்டி மத்தி.)

**பீற்றர்** (தெய்வேந்திரன் தவராசா - அல்லிப்பளை, பளை.)

**கலைச்செல்வன்** (துரைசிங்கம் மணிவண்ணன் - சிவன்கோயிலடி, வட்டுக்கோட்டை.)

ஆனையிறவில் சிறிலங்காப் படையினர் மேற்கொண்ட தாக்குதலில் வீரச்சாவெய்திய-

**பிரதாப்** (அருணாசலம் மோகன் - நாயன்மார்வீதி, நாயன்மார்க்கட்டு.)

ஆகியோரை இந்நாளில்
நினைவு கூருகின்றோம்

**விடுதலைப் புலிகள்**
**மக்கள் முன்னணி**

(சி / 4080)

# எதிரியின் அணியைச் சிதைத்து சரித்திரம் படைத்த எம்மவர்



# எதிரியின் அணியைச் சிதைத்து சரித்திரம் படைத்த எம்மவர்



லெப். ஒள்ளியன்



லெப்.புலித்தேவன்



தில்லையழகன்



தமிழ்மாறன்



இளம்வழுதி



லெப். தங்கன்



கப்டன் பாவலன்



லெப். சிவராஜ்



இளங்குமணன்



2-ஆம் லெப்.
ரஞ்சிதகுமார்



2ஆம் லெப்.வாமன்

பணலாறு பதினைந்தாம் கட்டையில் - சிறிலங்கா இராணுவத்தினரின முன்னேறிய முதல் அணியை தாக்கிச் சிதறடித்து மற்றுமோர் வீரசாதனை பலடத்தனர் விடுதலைப்புலிகள்.இதில், பதினைந்திற்கு மேற்பட்டஇராணுவத்தினர் கொல்லப்பட்டனர்.பலர்படுகாயமடைந்தனர்.பலநவீனஆயுதங்களைப் புலிகள் கைப்பற்றினர். இச்சமரில் 22 விடுதலைப்புலிகள் வீரச்சாவைத்தழுவினர்.



2-ம்லெப்இளங்கோ



2-ம்லெப்அசோகன்



எல்லாளன்



2ஆம் லெப்.
சந்திரன்



திருச்செல்வம்



மேஜர் ஜெயகரன்
(சாள்ஸ்)



லெப்.
புகழ்வேந்தன்



2 ஆம் லெப்.
செல்லத்துரை



லெப். ராகுலன்



2 ஆம் லெப்.
ஜெயா



2ஆம் லெப்.
யோகேந்திரன்

## சிந்தனைக்கு

தன் சொந்த அனுபவத்தால் கற்பதைத் தவிர மனிதன் வேறு அறிவு பெறுவதில்லை.

— வலேண்ட்


ஈழநாதம்

31, மகேந்திராவீதி, யாழ்ப்பாணம் 22-03-1992
தொலைபேசி
ஆசிரியபீடம் 025-2839 நிர்வாகபீடம் 2308
த. பெ. எண் 05


# ஒப்பரேசன் 'கஜபார' ஓர் மானப்பிரச்சினை

மணலாற்றுப் போர் விரிவடைந்து செல்கின்றது. சிறிலங்கா விமானப்படை, கடற்படை ஆகியவற்றின் அகோரக் குண்டுத்தாக்குதலின் மத்தியில் மோதல்கள் தொடர்ந்தும் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. சிறிலங்கா இராணுவத்தரப்பு திட்டமிட்டதை விடவும் போர் நீண்டு செல்வதை ஊகிக்க கூடியதாகவுள்ளது.

சிறிலங்கா இராணுவம் 3000 துருப்புக்களுடனும் டாங்கி, கவசவாகனப் படை அணி என்பனவற்றுடன் ஆரம்பிக்கப்பட்ட இச் சண்டைக்காக தற்பொழுது ஆயிரக்கணக்கான மேலதிக துருப்புக்கள் வவுனியாவில் இருந்து அனுப்பப்பட்டுள்ளது. அத்தோடு கவசவாகனப்படை அணிகளும் அனுப்பப்பட்டுள்ளன.

மணலாற்றில் புலிகள் மேற்கொண்ட இந்த அதிரடித்தாக்குதலானது. கடந்த வருடம் ஆனையிறவுப் போரின் போது வெற்றிலைக்கேணி கட்டைக்காட்டுப் பகுதியில் தரையிறங்கி முன்னேறி வந்த இராணுவத்தின் மீது புல்லாவெளியில் வைத்து புலிகள் ஊடுருவி நடத்திய தாக்குதலுக்கு ஒப்பானதாகும். புல்லாவெளியில் புலிகள் நடத்திய அந்த அதிரடித்தாக்குதலின் போது இராணுவத்தினருக்கு ஏற்பட்ட பாரிய இழப்பு அவர்களுடைய திட்டங்களை சிதைத்து முன்னேற்றத்தை தாமதித்ததோடு மேலதிக படை அணிகளையும் தளபாடங்களையும் பெற்றுக் கொள்ள வேண்டிய நிலையை ஏற்படுத்தியிருந்தது தற்போதைய சண்டையில் நடப்பவையும் அதையே உணர்த்துவதாய் உள்ளன.

மணலாற்றுப் போர் ஆரம்பிக்கப்பட்ட போது-அதாவது ஒப்பரேசன் 'கஜபார' ஆறாவது கட்டம் — இப் போர் முனை இவ்வளவு கடுமையானதாக இருக்கும் என சிறிலங்கா இராணுவத்தரப்பு எண்ணவில்லை. ஆனால் இராணுவ நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்ட அன்றே நடந்த புலிகளின் அதிரடித்தாக்குதல் இராணுவத்திற்குப் பெரும் இழப்பையும் அதிர்ச்சியையும் கொடுத்தது. சிறிலங்கா இராணுவ அணியின் மையப் பகுதியை அடித்துச் சிதறடிக்கும் வலிமையைப் புலிகள் பெற்றுள்ளார்கள். இராணுவம் எதிர்பார்க்கும் அளவில் புலிகள் பலவீனப்படவில்லை என்பதையும் இத் தாக்குதல் உணர்த்தியது.

# இந்திய இராணுவம் புலிகளிடம் தோற்றது; புலனாய்வுத் துறையே இதற்குப் பொறுப்பு

## இந்தியத் தளபதிகளின் குற்றச்சாட்டு

"யாழ்ப்பாண வீழ்ச்சியின் பின்னர் பேச்சு வார்த்தை மூலமான ஒரு தீர்வுக்கு முன்வருமாறு இராணுவம் கேட்ட போதிலும் வெளிவிவகார அதிகாரிகளினதும், புலனாய்வு அதிகாரிகளினதும் ஆலோசனையுடன் இயங்கிய அரசியல் அதிகாரிகள் அதனை ஏற்க மறுத்து விட்டனர். விடுதலைப் புலிகளுக்கு சங்கடமான ஒரு நிலையை உருவாக்கி அவர்களுக்கு பாடம் புகட்ட வேண்டும் என அதிகாரிகள் அப்போது எண்ணினர். ஆனால் யாருக்கு யார் பாடம் கற்பித்தனர் என்பதை சரித்திரம் தான் சொல்ல வேண்டும்" என்று லெப். ஜெனரல் திபேந்தர் சிங் தான் எழுதியுள்ள "இலங்கையில் இந்திய அமைதிகாக்கும் படை" என்ற நூலில் குறிப்பிட்டுள்ளார்.

இந்திய அமைதிப் படையின் தளபதியாக விளங்கிய திபேந்தர் சிங்கின் இந்த நூலும், யாழ்ப்பாணப் பிரிவுக்குப்பொறுப்பாகஇருந்த லெப். ஜெனரல் எல் சி. சர்தேஷ் பாண்டே எழுதிய "அசைன்மென்ட் யாழ்ப்பாணம்" என்ற தலைப்பிலான நூலும் அண்மையில் வெளிவந்துள்ளன.

இந்திய அமைதி காக்கும் படை இலங்கையில் இருந்து வெளியேறிய இரண்டு வருடங்களின் பின்னர் அது தொடர்பாக வெளியாகியுள்ள இந்த இரு புத்தகங்களும் இலங்கையில் இந்திய அமைதிப்படையின் பங்களிப்பு - படிப்பினைகள் தொடர்பான பல புதிய சிந்தனைகளை ஏற்படுத்தியுள்ளது.

இந்தப் புத்தகங்கள் குறித்து கருத்து வெளியிட்டிருக்கும் மனோஜ் ஜோசி 'இந்த நூல்களில் உள்ள படிப்பினைகளும், முக்கிய அம்சங்களும் இராணுவத்தின் தற்போதைய சந்ததியினருக்கும் ,ராஜ தந்திரிகள், புலனாய்வுப் பிரிவினர் மற்றும் அரசியல் வாதிகளுக்கு ஒரு படிப்பினையாக அமையலாம்" எனத் தெரிவித்துள்ளார்.

இந்திய அமைதி காக்கும் படை தனது தாற்பரியங்களை விளக்கவே இந்த இரு நூல்களும் வெளியாகிஉள்ளன என்றும் தெரிவிக்கப்படுகிறது.

ராணுவ தீர்மானம் மேற்கொள்ளும் நடவடிக்கைகளில் சம்பந்தப்படுவதற்கு முன்னர் 1987 செப்டெம்பருக்கு முன்னர் அரசியல் அதிகாரத்துவ தலைமையின்மீதே இதற்கான குற்றச்சாட்டுகளைச் சுமத்த முடியும்.

ஆனால் யாழ்ப்பாணம் வீழ்ச்சியடைந்த பின்னரும் கூட அரசியல் வாதிகளின் தவறான நடடிக்கைகள் பற்றி லெப். ஜெனரல் திபேந்தர் சிங் தன்னுடைய நூலில் சுட்டிக் காட்டத் தவறவில்லை.

விடுதலைப் புலிகளின் கையிலிருந்து யாழ்ப்பாணம் கைப்பற்றப்பட்ட ஒரு மாதத்திற்குள்ளாகவே யுத்தம் வன்னிக் காட்டுப்பகுதியை நோக்கி நகர்ந்தது.

நீண்ட நாட்களாகமுடிவின்றி நீடித்த இந்த யுத்தம் தொடர்பான செய்திகள் தினசரிகளில் முக்கியமான இடத்தைப் பெற்றுக் கொண்டன.

ஆனால் இது குறித்து விமர்சித்த ஃபீல்ட் மாஷல் எஸ். எச். எப். ஜே. மனேக்ஷோ "தினசரிகளில முக்கிய இடத்தை இவை பெற்றாலும் இதில் எந்த விதமான வெற்றிகள் பற்றிய செய்திகளையும் ஆவணப்படுத்தி வைக்க முடியாதென்பதால் இது தொடர்பான செய்திச் சேகரிப்புளுக்கும் கூட சரியான உற்சாகம் வழங்கப்படவில்லை" எனத் தெரிவித்துள்ளார். இவர்தான் திபேந்தர் சிங்கின் நூலுக்கு முன்னுரை எழுதியவராவர்.

1990 மார்ச்சில் "மறந்து போய்விட்ட" யுத்தத்தை முடித்துக் கொண்ட இந்திய அமைதிப்படை தாயகம் மீண்டபோது சென்னையில் அவர்களுக்கு ஒரு அவமதிப்பான வரவேற்பு வழங்கப்பட்டது. அப்போது தமிழக முதல்வராக இருந்த கருணாநிதி மட்டுமல்ல ஏனைய கட்சிகள் கூட இதனை ஒரு பயனற்ற வேலை என்றே கருதினர்.

1987 ஏப்ரல் முதல் 1988 பெப்ரவரி வரையிலான காலப் பகுதியில் நடைபெற்ற சம்பவங்களையே திபேந்தர் சிங் தன்னுடைய நூலில் விவரிக்கின்றார். ஆனால் அதன் பின்னர் இந்தியப்படை மீளப்பெறப்படும் காலம் வரையிலான சம்பவங்களை சர்தேஷ் பாண்டே தன்னுடைய நூலில் விளக்குகின்றார்.

ஆனால், யுத்த காலத்தில் காணப்பட்ட உயர்மட்ட வழிகாட்டல்களை இவர்கள் இருவருமே கடுமையான வார்த்தைகளால் விமர்ச்சிக்கின்றார்கள்

"இலங்கையில் இந்திய அமைதி காக்கும் படையில் கடமையாற்றிய பத்து மேஜர் ஜெனரல்களில் ஒருவர் மட்டுமே லெப்டினன்ட் ஜெனரலாக பதவி உயர்வு பெற்றார். இதில் சில தவறுகள் இடம் பெற்றிருக்க வேண்டும்" என திபேந்தர்சிங் தனது நூலிலும்;

"இலங்கை யுத்தத்தில் ராணுவப் பிரிவுகளுக்கு தலைமை தாங்கிய பல தளபதிகளுக்கு பதவி உயர்வு வழங்கப்படவில்லை. இவர்கள் வெற்றிகரமாகவும், திருப்திகரமாகவும் தமது கடமைகளைப் புரிந்துள்ளனர். ஆனால் அமைதியான இடங்களில் அமைதியான அலுவலக வேலைகளில் ஈடுபட்டிருந்த பலர் பதவி உயர்வு பெற்றுள்ளனர்" என சர்தேஷ் பாண்டே தனது நூலிலும் குறிப்பிட்டுள்ளார்.

இராணுவ ரீதியான பல விடயங்களை கொண்டிருக்காமல் சில குறிப்பான விடயங்களை தந்த திபேந்தர் சிங்கின் நூல்-

இந்திய அமைதிப்படையால் ஏன் புலிகளை வெற்றி கொள்ள முடியவில்லை என்பதை விளக்கத் தவறி விட்டார் என இந்த நூலுக்கு முன்னுரை எழுதிய மனேக்ஷோ குறிப்பிடுகின்றார்.

உறுதியாக மேற்கொள்ளப்படும் எந்த ஒரு ஆய்வும் இலங்கையில் தோல்வியடைந்த அமைப்புக்களில் ராணுவமும் ஒன்று என்ற உண்மையைக் கொண்டு வரும் இதில் தோல்வியைத் தழுவிய மற்றைய அமைப்புக்கள் எவை? இதன் தோல்விக்கான முக்கிய பொறுப்பு 'றோ' மீதே சுமத்தப்படுகிறது. வெளிவிவகார அமைச்சின் பங்களிப்பு என்ன என்ற கேள்வியும் இங்கு எழுப்பப்படுகின்றது.

இலங்கையில் அடைந்த தோல்விக்கான 'விலை' யை பலர் செலுத்தி விட்டனர். இன்னும சிலர் செலுத்தவில்லை இறுதியாக இதற்குப் பொறுப்பாகவிருந்த முன்னாள் பிரதமர் ராஜீவ் காந்தி இதற்கான கோரமான ஓர் 'விலை'யை செலுத்தினார்.

இலங்கை நடவடிக்கை தொடர்பாக விமர்சன ரீதியான பின்னோக்கிய பார்வை ஒன்றை இந்திய இராணுவம் மேற்கொண்டது. இது இரகசியமாக இருக்கும் வரையில் இதனை சுய தேவைக்கான ஒன்றாக மட்டுமே கருத முடியும் உண்மையில் இது ஒரு பரிதாபகரமான நிலைதான். தோல்விகளில் இருந்து சரியான பாடங்கள் பெறப்படாவிடின், வெற்றிகள் நழுவிச் சென்று கொண்டே இருக்கும்.

இந்த இரு நூல்களுக்கும் விமர்சனம் எழுதியுள்ள பிரபல பத்திரிகையாளர் மனோஜ் ஜோசி "வியட்நாமில் அமெரிக்காவிற்கு ஏற்பட்ட தோல்விக்குத் தொலைக்காட்சி மற்றும் வெகுஜனத் தொடர்பு சாதனங்கள், யுத்தத்திற்கு எதிரான அமைப்புகளின் நடவடிக்கைகள் அரசியல் வாதிகளே காரணம் என்றுதான் முதலில் வலியுறுத்திக் கூறப்பட்டது. ஆனால் 1970 களின் பிற்பகுதியில் அதனுடைய சொந்த தந்திரோபாயங்களே இதற்குக் காரணம் என்பதும் ஏற்றுக்கொள்ளப்பட்டது. அன்றைய தினத்தில் இருந்து தான் புதிய அமெரிக்க இராணுவம் பிறந்தது பழைய தவறுகளிலிருந்து படிக்கத் தவறுபவர்கள் மீண்டும் அதையே செய்வதற்கான கண்டனத்திற்குள்ளாவார்கள்" என்று குறிப்பிட்டுள்ளார்.

நன்றி, புரண்ட்லைன்

# மரக்கூட்டுத்தாபன ஊழியர் அநு.புரத்திற்கு இடமாற்றம்

கிளிநொச்சி மாவட்டத்தில் உள்ள அரசாங்க மரக் கூட்டுத்தாபனத்தில் பணிபுரிந்த உத்தியோகத்தர்கள் நால்வர் தலைமைக் காரியாலயத்தினால் திடீரென்று அநுராதபுர மாவட்டத்திற்கு இடமாற்றப்பட்டுள்ளனர்.

காட்டுப் பிரயோசனங்களை விற்பனைப் பிரிவுகளுக்கு அனுப்புவதைக் கடமையாகக் கொண்ட விநியோகப்பகுதி உத்தியோகத்தர்கள் அனைவரையும் இடமாற்றம் செய்திருப்பது கூட்டுத்தாபனம் வடபகுதியில் உள்ள தனது சகல பிரிவுகளையும் மூடிவிட எடுக்கும் நடவடிக்கையாகவே இருக்கக்கூடும் என கருதப் படுகிறது.

## கண்டெடுக்கப்பட்டது

[யாழ்ப்பாணம்]

தியாகராசா சந்திரகுமார், தியாகராசா அன்னபூரணம் என்போரை பிரதான குடியிருப்பாளர்களாகக் கொண்ட உளர் உணவு விநியோகத்திற்கான 'இ' அனுமதி அட்டைகள் முத்திரைச் சந்திப் பகுதியில் மாதுகா ரெக்ஸ்ரைல் உரிமையாளரினால்கண்டெடுக்கப்பட்டு எமது அலுவலகத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. உரியவர்கள் அலுவலக நேரத்தில் நேரில் வந்து பெற்றுக் கொள்ளலாம்.

# வாழப்பாடியின் பதில் திருப்தியாக இருக்கவில்லை

"சிறிபெரம்புதூரில் ராஜீவ் காந்தி தங்குவது பொருத்தமானதல்லஅந்தத் திட்டத்தை மாற்றவேண்டுமென தமிழ் நாடு இந்திரா காங்கிரஸ்தலைவர் வாழப்பாடி ராமமூர்த்திடம் கூறினேன் அவர் அதற்கு முயற்சி செய்கிறேன் என்று பதிலளித்தார். அது எனக்கு திருப்தி அளிக்கவில்லை."

இவ்வாறு முன்னாள் புல அதிபர் சி. சர்மா, வர்மா ஆணைக்குழுமுன் சாட்சியமளிக்கையில தெரிவித்தார்.

இந்த ஆணைக்குழு முன்பே சாட்சியமளித்தசர்மா மேலும் தெரிவிக்கையில், எனக்கு திருப்தி ஏற்படாததை அடுத்து டில்லியில் உள்ள புலனாய்வு அலுவலகத்துடன் தொடர்பு கொண்டு எடுத்துக் கூறினேன். இது பற்றி ராஜீவ் காந்தியி...

யில் நடப்பவையும் அதையே உணர்த்துவதாய் உள்ளன.

மணலாற்றுப் போர் ஆரம்பிக்கப்பட்ட போது-அதாவது ஒப்பறேசன் 'கஜபார' ஆறாவது கட்டம் — இப்போர் முனை இவ்வளவு கடுமையானதாக இருக்கும் என சிறிலங்கா இராணுவத்தரப்பு எண்ணவில்லை. ஆனால் இராணுவ நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்ட அன்றே நடந்த புலிகளின் அதிரடித்தாக்குதல் இராணுவத்திற்குப் பெரும் இழப்பையும் அதிர்ச்சியையும் கொடுத்தது. சிறிலங்கா இராணுவ அணியின் மையப் பகுதியை அடித்துச் சிதறடிக்கும் வலிமையைப் புலிகள் பெற்றுள்ளார்கள். இராணுவம் எதிர்பார்க்கும் அளவில் புலிகள் பலவீனப்படவில்லை என்பதையும் இத்தாக்குதல் உணர்த்தியது.

இராணுவ அணியின் மீது புலிகள் மேற்கொண்ட தாக்குதல், இராணுவத் திட்டத்தில் எதிர்பாராத சந்திப்பு என்பதை சிறிலங்காவின் கூட்டுப் படைகளின் நடவடிக்கையின் தளபதி ஜெனரல் ஹமில்டன் வனசிங்கா, இராணுவத் தளபதி லெப். ஜெனரல் சிசில் வைத்தியரெட்ன, வட மாகாண இராணுவத் தளபதி டென்சில் கொப்பேக்கடுவ ஆகியோர் மணலாற்றிற்கு திடீர் விஜயம் செய்ததில் இருந்தே புரிந்து கொள்ளலாம்.

இராணுவத் தளபதிகள் போர் நடைபெறும் பகுதிகளுக்குச் செல்வது வழமையானதுதான். கடந்த வருடம் நடைபெற்ற ஆனையிறவுப் போரின் போதும், செப்டம்பர் மாதத்தில் நடந்த மணலாற்றுப் போரின் போதும் இராணுவத் தளபதிகள் ஸ்தலத்திற்கு விரைந்தனர். ஆயினும் இராணுவ நடவடிக்கை ஆரம்பித்து ஓரிரு நாட்களுக்குள் யுத்தப் பிரதேசத்திற்கு விரையவில்லை. சண்டை தணிந்து இராணுவம் பின்வாங்கிச் செல்வதற்கு சண்டை ஆரம்பித்து சுமார் ஒரு மாதத்தின் பின் -முன்னரே விஜயம் செய்தனர்

இந்நிலையில், தற்போதைய மணலாற்றுப் போர் ஒப்பரேசன் 'சஜபார' - சிறிலங்கா இராணுவத்தினரின் சோதனைக்களமாக மாறிவிட்டது புலிகள் பலவீனப்பட்டு விட்டனர். குடாநாட்டிற்குள் புலிகள் முடக்கப்பட்டு விட்டனர். மரபு ரீதியான போர் முனைக்கும் புலிகள் புறங்காட்டத் தொடங்கி விட்டனர் என்ற இராணுவத்தினரின் பிரசாரத்திற்கும், இந்தியாவே புலிகளின் பின் தளமாக இருந்தது. தமிழ்நாட்டில் புலிகள் ஒழிக்கப்பட்டதனால், புலிகள் இனித் தலை எடுக்க முடியாது என்ற கணிப்பீட்டிற்கும், புலிகள் கொடுத்த பலமான அடி இதுவாகும். இந்நிலையில், ஒப்பரேசன் சஜபார' சிறிலங்கா இராணுவத்தின் மானப் பிரச்சினையாக தற்பொழுது மாறிவிட்டது.

# டுபாயிலிருந்து திரும்பிய பெண் எயிட்சால் மரணம்

(கொழும்பு)

டுபாயில் இருந்து நாடு திரும்பிய பெண் ஒருவர் எயிட்ஸ் நோயினால் பீடிக்கப்பட்டு பின்னர் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டு மரணமானார் எனத் தெரிவிக்கப்படுகிறது.

கடந்த புதன்கிழமை டுபாயில் இருந்து திரும்பிய இப்பெண் அங்கு பணிப்பெண்ணாக கடமையாற்றினார் என்றும், இவருக்கு வயது 35 என்றும், இவர் நீர்கொழும்பு ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்ட பின்னர் நேற்று முன் தினம் உயிரிழந்தார் என்றும் கொழும்புப் பத்திரிகைகள் செய்தி வெளியிட்டுள்ளன.

# மரக்கூட்டுத்தாபன ஊழியர் அநு.புரத்திற்கு இடமாற்றம்

கிளிநொச்சி மாவட்டத்தில் உள்ள அரசாங்க மரக்கூட்டுத்தாபனத்தில் பணிபுரிந்த உத்தியோகத்தர்கள் நால்வர் தலைமைக் காரியாலயத்தினால் திடீரென்று அநுராதபுர மாவட்டத்திற்கு இடமாற்றப்பட்டுள்ளனர்.

காட்டுப் பிரயோசனங்களை விற்பனைப் பிரிவுகளுக்கு அனுப்புவதைக் கடமையாகக் கொண்ட விநியோகப்பகுதி உத்தியோகத்தர்கள் அனைவரையும் இடமாற்றம் செய்திருப்பது கூட்டுத்தாபனம் வடபகுதியில் உள்ள தனது சகல பிரிவுகளையும் மூடிவிட எடுக்கும் நடவடிக்கையாகவே இருக்கக்கூடும் என கருதப்படுகிறது.

# யாழ். மாவட்டத்திற்கு கொழும்புக் கோழிக்குஞ்சு

(யாழ்ப்பாணம்)

யாழ் மாவட்டத்தில் கோழி வளர்ப்பை ஊக்குவிப்பதற்காகக் கொழும்பிலிருந்து கோழிக்குஞ்சுகளைத் தருவிக்க யாழ். அரசாங்க அதிபர் நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளார்.

யாழ். மாவட்டத்தில் அருகி வரும் கோழிவளர்ப்பை ஊக்குவிக்கும் நோக்குடன் யாழ். பல்கலைக்கழக விவசாய பீடமும், அரச அதிபரும் இதற்கான முயற்சியில் ஈடுபட்டுள்ளனர்.

இதன் முதற்கட்டமாக மாதந்தோறும் ஐயாயிரம் ஒரு மாதக் குஞ்சுகளைத் தருவிக்க ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

இக்குஞ்சுகள் பத்தொன்பது ரூபா வீதம் விற்பனை செய்யப்படவுள்ளதாகவும் அரச அதிபர் தெரிவித்தார். (பா)

# வடபகுதி பத்திரிகைகளில் இராணுவத்தினர் ஆர்வம்

(வவுனியா)

யாழ்ப்பாணத்திலிருந்து வெளிவரும் பத்திரிகைகள் மற்றும் செய்தி ஏடுகளை பெற்றுக்கொள்வதில் சிறிலங்கா இராணுவத்தின் உளவுப் பிரிவினர் மிக ஆர்வம் காட்டி வருகின்றனர்

வவுனியா தாண்டிக்குளம் சிறிலங்கா இராணுவத்தின் சோதனை முகாம் பகுதியில் வைத்து கைதுசெய்யப்படும் மக்களை விசாரணைக்கு உட்படுத்தும் இராணுவ உளவுப் பிரிவினர் 'விடுதலைப்புலிகள்' 'ஈழநாதம்' பத்திரிகைகளை கட்டாயம் கொண்டுவரும்படி கூறி அவர்களை விடுதலை செய்கின்றனர்

வேறு பத்திரிகைகள் கிடைத்தாலும் தம்மிடம் தரும்படி அவர்கள் வற்புறுத்துகின்றனராம். (தி)

# விசர்நாய்கடி தடுப்பு மருந்து விரைவில் எடுத்துவரப்படும்

(யாழ்ப்பாணம்)

விசர்நாய் கடி தடுப்பு மருந்து உட்பட யாழ் போதனா மருத்துவமனைக்குத் தேவையான மருந்துப் பொருள்களின் தொகுதி ஒன்று மிக விரைவில் கொழும்பிலிருந்து எடுத்து வரப்பட இருக்கிறது.

கொழும்பு சென்று திரும்பிய இவ் வைத்தியசாலையின் பணிப்பாளர் இத்தகவலைத் தெரிவித்தார்,

போதனா வைத்தியசாலையில் பற்றாக்குறையாக இருக்கும் மருந்து வகைகள் பற்றியும் தேவையான மருந்துப் பொருள்கள் பற்றியும் போதனா வைத்தியசாலைகள் மகளிர் விவகார அமைச்சிற்கு அறிவித்ததைத் தொடர்ந்து இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கின்றது எனினும் சில நோய்த்தடுப்பு மருந்து வகைகளும், வலி தடுப்பு மருந்து வகைகளும் தேவைக்குப் போதிய அளவில் பெற்றுக் கொள்ள முடியவில்லை என்று தெரிவிக்கப்படுகிறது. (க, ச)

## கண்டெடுக்கப்பட்டது

[யாழ்ப்பாணம்]

தியாகராசா சந்திரகுமார், தியாகராசா அன்னபூரணம் என்போரை பிரதான குடியிருப்பாளர்களாகக் கொண்ட உணர் உணவு விநியோகத்திற்கான 'இ' அனுமதி அட்டைகள் முத்திரைச் சந்திப் பகுதியில் மாதுகா ரெக்ஸ்ரைல் உரிமையாளரினால் கண்டெடுக்கப்பட்டு எமது அலுவலகத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. உரியவர்கள் அலுவலக நேரத்தில் நேரில் வந்து பெற்றுக் கொள்ளலாம்.

# நாய்களுக்கு தடுப்பூசி

யாழ். மாநகராட்சி மன்ற நகர்ப்பகுதியில் உள்ள வளர்ப்பு நாய்களுக்கு விசர் நோய்க்கான தடை மருந்து நேற்றுமுன் தினம் போடப்பட்டது

பலாலி வீதியில் உள்ள ஆரம்ப சுகாதார நிலையம், சன்மார்க்க ஐக்கிய முன்னணி சனசமூக நிலையம், தாராக் குளம். அத்தியடி சனசமூக நிலையம் ஆகிய நிலையங்களில் சுமார் 300 க்கும் மேற்பட்ட நாய்களுக்கு ஊசி போடப்பட்டதாகவும். இதில் பொதுமக்கள் பூரண ஒத்துழைப்பு வழங்கியுள்ளதாகவும் இப்பகுதி பொது சுகாதாரப் பரிசோதகர் திரு து.மகாதேவா தெரிவித்தார்.

இம் மருந்து போடும் வேலைகள் பல பகுதிகளிலும் விஸ்தரிக்கப்படடிருப்பது குறிப்பிடத்தக்கது. (பா)

## பெற்றுக் கொள்ளவும்

கடந்த செவ்வாய்க் கிழமை பிறவுண்வீதியில் ப.ஜெயந்தன் என்பவரால் சிறுதொகைப் பணம் கண்டெடுக்கப்பட்டு எமது காரியாலயத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

உரியவர்கள் ஆதாரம் காட்டி பெற்றுக் கொள்ளவும்.

# வருட இறுதியில் தேர்தல் நடத்தலாமாம்

கிழக்கில் நடப்பாண்டு இறுதியில் தேர்தலை நடத்தலாம் என்று தேர்தல் திணைக்கள வட்டாரங்கள் தெரிவிக்கின்றன

கிழக்கைப் புலிகளின் கட்டுப்பாட்டிலிருந்து இராணுவம் மீட்டெடுத்திருப்பதால், ஆண்டு முடிவில் அங்கு தேர்தல் நடத்துவது சாத்தியம் என்றும் அதே வட்டாரங்கள் நம்பிக்கை தெரிவிக்கின்றன.

# வாழப்பாடியின் பதில் திருப்தியாக இருக்கவில்லை

''சிறிபெரம்புதூரில் ராஜீவ் காந்தி தங்குவது பொருத்தமானதல்ல அந்தத் திட்டத்தை மாற்றவேண்டுமென தமிழ்நாடு இந்திரா காங்கிரஸ் தலைவர் வாழப்பாடி ராமமூர்த்தியிடம் கூறினேன் அவர் அதற்கு முயற்சி செய்கிறேன் என்று பதிலளித்தார். அது எனக்கு திருப்தி அளிக்கவில்லை.''

இவ்வாறு முன்னாள் புலனாய்வுத்துறை பொலிஸ் மா அதிபர் சி. சர்மா, வர்மா ஆணைக்குழு முன் சாட்சியமளிக்கையில் தெரிவித்தார்.

இந்த ஆணைக்குழு முன்பே சாட்சியமளித்த சர்மா மேலும் தெரிவிக்கையில், எனக்கு திருப்தி ஏற்படாததை அடுத்து டில்லியில் உள்ள புலனாய்வு அலுவலகத்துடன் தொடர்பு கொண்டு எடுத்துக் கூறினேன். இது பற்றி ராஜீவ் காந்தியிடமும் தெரிவிக்கும்படியும் சொன்னேன் எனவும் குறிப்பிட்டார்.

## புலிகள் விவகாரம்

# தமிழக அரசுடன் கருத்து வேறுபாடில்லை - மத்திய அமைச்சர்

(திருவனந்தபுரம்)

விடுதலைப் புலிகள் தொடர்பாக மத்திய அரசுக்கும், மாநில அரசுக்கும் இடையே கருத்து வேறுபாடுகள் எதுவுமில்லையென மத்திய உள்துறை இணை அமைச்சர் எம். எம். ஜேகப் தெரிவித்தார். கடந்த வியாழக்கிழமை கேரள மாநிலத் தலைநகர் திருவனந்தபுரத்தில் செய்தியாளர்களிடையே பேசிய அவர் மேலும் கூறுகையில், விடுதலைப் புலிகள் இயக்கம் மீது தடைவிதிப்பது பற்றி மத்திய அரசு மிகுந்த மும்முரமாகவே பரிசீலித்து வருவதாகத் தெரிவித்தார். விடுதலைப் புலிகளுக்கு எதிராக திறம்பட செயற்படுவதாக அவர் தமிழக முதல்வருக்கும் பாராட்டு தெரிவித்தார்.

## தமிழக மீனவர் மீது தாக்குதல்

# உறுதியான நடவடிக்கை மத்திய அரசிடம் இல்லை

(சென்னை)

''தமிழக மீனவர்கள் சிறிலங்கா கடற்படையினரால் தாக்கப்படுவது, கடத்தப்படுவது குறித்து இந்தியப் பிரதமருக்கு கடிதம் மூலமும் நேரிலும் தெரிவித்தும் கூட மத்திய அரசு இதுவரை உறுதியான நடவடிக்கை எதுவும் எடுக்கவில்லை'' என்று தமிழக முதலமைச்சர் செல்வி ஜெயலலிதா தெரிவித்துள்ளார்.

சட்டப் பேரவையில் நேற்று முன் தினம் உரையாற்றிய ஜெயலலிதா இதனைத் தெரிவித்தார்.

வேதாரணியம், கோடிக்கரை பகுதிகளில் கடந்த சில நாட்களாக சிறிலங்கா கடற்படையினர் இந்திய மீனவர்கள் மீது அத்துமீறி தாக்குதல் நடத்தி துப்பாக்கிப் பிரயோகம் செய்து வருவதால் மீனவர்கள் படுகாயமடைந்துள்ளனர் என்றும்

இதன் காரணமாக அப்பகுதி மீனவர்கள் மத்தியில் ஏற்பட்டுள்ள பதற்ற நிலை குறித்து இந்திரா காங்கிரஸ் உறுப்பினர் சி. வி. ராஜேந்திரன் கவனயீர்ப்பு தீர்மானம் ஒன்றைக் கொண்டு வந்தார்.

# பிரேமதாசா உறுதியாக உள்ளாராம்

(கொழும்பு)

பாராளுமன்றத் தெரிவுக் குழு மூலம் இனப்பிரச்சினையைத் தீர்ப்பதில் ஜனாதிபதி ஆர். பிரேமதாசா உறுதி கொண்டுள்ளார் என்று சிறிலங்காவின் வர்த்தகத்துறை அமைச்சர் ஏ. ஆர். மன்சூர் தெரிவித்துள்ளார்.

# இலங்கைப் பிரஜைகள் தலா 25,000 ரூபா கடனாளிகள்

(கொழும்பு)

இந் நாட்டில் தொடர்ந்து பதினைந்து வருட காலம் ஆட்சிப் பீடத்தில் அமர்ந்திருந்த ஐ.தே.க. அரசாங்கம் இக்காலப்பகுதியில் 18,000 கோடி ரூபாவை வெளிநாடுகளிலிருந்து கடனாகப் பெற்றிருக்கின்றது. இதன்படி பார்த்தால் இந்நாட்டிலுள்ள ஒவ்வொருவரும் இருபத்தையாயிரம் ரூபாவிற்கு வெளிநாட்டிற்கு ஈடு வைக்கப்பட்டுள்ளனர்.

இவ்வாறு மாக்கந்துறை என்னுமிடத்தில் நடைபெற்ற பொதுக் கூட்டமொன்றில் பேசிய முன்னாள் எம்.பி. யும் கம்யூனிஸ்ட் கட்சியின் உப தலைவருமான டியூ குணசேகரா குறிப்பிட்டார். அவர் மேலும் பேசுகையில், தோட்டங்களிலிருந்து கிடைக்கப்பட்ட பணத்திலேயே தேர்தல்களுக்கு செலவிடப்பட்டது. கடந்த பதினைந்து வருடத்திலே தோட்டங்கள் வங்குரோத்து நிலைக்குச் சென்றன. ஐ.தே.கட்சி அரசுதான் தோட்டங்களை நாசம் செய்தது எனவும் குற்றஞ்சாட்டினார்.

## சத்தியஜித்ரேக்கு பாரத ரத்னா விருது

(டில்லி)

இந்தியாவின் உயரிய விருதான 'பாரத ரத்னா' விருது திரைப்பட இயக்குநர் சத்தியஜித்ரேக்கு வழங்கப்பட்டுள்ளதாக ஜனாதிபதி செயலகம் அறிவித்துள்ளது.

எழுபத்தொரு வயதான சத்தியஜித்ரே திரைப்படத் துறையில் ஒவ்வொரு பெரும் விருதையும் பெற்றிருக்கிறார் என்றும், உலகின் பத்து தலையாய திரைப்பட இயக்குநர்களில் ஒருவர் என்றும் இவர் புகழப்படுகின்றார்.

சர்வதேச புகழ்மிக்க ஆஸ்கார் விருதும் இந்த ஆண்டு இவருக்கு வழங்கப்பட்டது குறிப்பிடத்தக்கது.

### உலக கிண்ண கிரிக்கட்

## இறுதி ஆட்டத்திற்கு பாகிஸ்தான் தெரிவு

(ஆர்க்லண்ட்)

உலகக் கிண்ண கிரிக்கட் போட்டித் தொடரில் இறுதிப் போட்டியில் விளையாட பாகிஸ்தான் தகுதி பெற்றுள்ளது. நேற்று ஆர்க்லாண்டில் நியூசிலாந்துக்கும், பாகிஸ்தானுக்கும் இடையே நடைபெற்ற அரை இறுதிப் போட்டியில் நியூசிலாந்தைப் பாகிஸ்தான் தோற்கடித்தது.

முதலில் துடுப்பெடுத்தாடிய நியூசிலாந்து ஏழுவிக்கட் இழப்பிற்கு இருநூற்றி அறுபத்தியிரண்டு ஓட்டங்களைப் பெற்றது. பின்னர் பாகிஸ்தான் ஆறு விக்கட் இழப்பிற்கு இருநூற்றி அறுபத்துஆறு ஓட்டங்களைப் பெற்று வெற்றி வாகை சூடியது.

### சென்-ஜோன்ஸ் சென்றல்

## மாபெரும் கிரிக்கெட் போட்டி வெற்றி - தோல்வியில்லை

(யாழ் விளையாட்டு நிருபர்)

யாழ்ப்பாணத்தில் சென் ஜோன்ஸ் கல்லூரிக்கும் யாழ். மத்திய கல்லூரிக்குமிடையில் நடைபெற்ற 88-வது மிகப் பெரிய கிரிக்கெட் போட்டி வெற்றி தோல்வியின்றி முடிவுற்றது. இப் போட்டி யாழ். மத்தியகல்லூரி மைதானத்தில் இடம் பெற்றது.

முதலில் துடுப்பெடுத்தாடிய யாழ் மத்திய கல்லூரி அணி முதல் இன்னிங்சில் 344ஓட்டங்களை 9 விக்கெட் நஷ்டத்திற்கு பெற்று ஆட்டத்தை நிறுத்திக்கொண்டது. யாழ். மத்திய கல்லூரி உதவி அணித் தலைவர் ரகுதாஸ் சிறப்பாக விளையாடி 143ஓட்டங்களைப் பெற்றார்.

சென் ஜோன்ஸ் கல்லூரி தனது முதலாவது இனிங்சில் சகல விக்கட்டுகளையும் இழந்து 226 ஓட்டங்களை பெற்றுக் கொண்டது. இவ் ஓட்ட எண்ணிக்கை 'பலவோணை' தவிர்க்க போதாமையால் மீண்டும் துடுப்பெடுத்தாட வேண்டிய கட்டாய நிலை சென் - ஜோன்ஸ் கல்லூரிக்கு ஏற்பட்டது. சென் ஜோன்ஸ் கல்லூரி இரண்டாவது இனிங்சில் எட்டு விக்கட் இழப்பிற்கு 133 ஓட்டங்களைப் பெற்றது. இதைத் தொடர்ந்து நேரம் போதாமையினால் விளையாட்டு வெற்றி தோல்வியின்றி முடிவுற்றது.

## செஞ்சிலுவையை வெளியேற பணிப்பு

(தெகிரான்)

ஈரானிய அரசு நேற்றுமுதல் சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தின் பணிகளைத் தடை செய்துள்ளது. இந்த நிவாரண உதவி நிறுவனத்தின் ஊழியர்கள் அனைவரும் அடுத்து வரும் ஏழு தினங்களுக்குள் நாட்டைவிட்டு வெளியேற வேண்டுமெனவும் ஈரானிய உத்தரவில் கூறப்பட்டுள்ளது.

அனைத்துலக நிவாரண நிதிநிறுவனமொன்றின் இலக்குகளுக்கு முரணாக செஞ்சிலுவைச்சங்க ஊழியர்கள் செயற்பட்டதால் இம்முடிவு எடுக்கப்பட்டதாக ஈரானின் வெளியுறவுத்துறை துணை அமைச்சர் அறிவித்துள்ளார்.

### சென்.பற்றிக்ஸ்- யாழ்ப்பாண கல்லூரி

## வெற்றி-தோல்வி இலலாமல் கிரிக்கட் போட்டி முடிவு

(யாழ் விளையாட்டு நிருபர்)

சென்பற்றிக்ஸ் கல்லூரிக்கும் யாழ்ப்பாணக் கல்லூரிக்குமிடையில் நடைபெற்ற75-வது மாபெரும் கிரிக்கட் போட்டி வெற்றி தோல்வியின்றி முடிவுற்றது.

இப் போட்டி சென்பற்றிக்ஸ் கல்லூரி மைதானத்தில் இடம் பெற்றது.

முதலில் துடுப்பெடுத்தாடிய சென்பற்றிக்ஸ் கல்லூரி தனது முதலாவது இன்னிங்சில் மொத்தம் 226 ஓட்டங்களையும், இரண்டாவது இனிங்சில் 5 விக்கட் இழப்பிற்கு 42 ஓட்டங்களையும் பெற்றது.

யாழ்ப்பாணக்கல்லூரி தனது முதலாவது இன்னிங்சில் மொத்தம் 186 ஓட்டங்களையும், இரண்டாவது இனிங்சில் ஒரு விக்கட் இழப்பிற்கு 26 ஓட்டங்களையும் பெற்றது.

நேரம்போதாமையால் விளையாட்டு வெற்றிதோல்வியின்றி முடிவுற்றது.

## மேஜர் டாம்போவிற்கு முதல்வீர அஞ்சலிக் கூட்டம்

(மூழங்காவில்)

கரும்புலி மேஜர் டாம்போ உட்பட சிலாபத்துறையிலுள்ள சிறிலங்கா இராணுவ முகாம் தகர்ப்பு முயற்சியில் வீரச்சாவைத் தழுவிக் கொண்ட எழுபத்தொன்பது வீரவேங்கைகளின் முதலாமாண்டு நினைவஞ்சலிக் கூட்டம் நேற்று முன் தினம் முழங்காவிலில் பெருமளவில் நடாத்தப்பட்டது. இக் கூட்டத்தில் பெருமளவு பொது மக்களும் கலந்து கொண்டனர்.

கடந்த ஆண்டு மார்ச் பத்தொன்பது முதல் இருபத்திரண்டாம் திகதி வரையான பகுதியில் நடாத்தப்பட்ட தாக்குதல்களில் கரும்புலி மேஜர் டாம்போ உட்பட எழுபத்தொன்பது வீர வேங்கைகள் வீரச்சாவைத் தழுவிக் கொண்டது நினைவூட்டத்தக்கது.

## புலிகளைத் தடை செய்ய மூப்பனார் கோரிக்கை

(சென்னை)

விடுதலைப் புலிகள் இயக்கத்திற்கு தடைவிதிக்க வேண்டுமென இந்திரா காங்கிரஸின் மூத்த தலைவர்களில் ஒருவரான ஜி.கே. மூப்பனார்வேண்டுகோள் விடுத்துள்ளார் எனத் தெரிவிக்கப்படுகிறது.

மதுரையில் செய்தியாளர்கள் மத்தியில் பேசிய ஜி.கே. மூப்பனார் ராஜீவ் காந்தி கொலைஉட்பட பல்வேறு குற்றங்களில் விடுதலைப்புலிகள் சம்பந்தப் பட்டிருப்பதால் அந்த இயக்கத்தை தடை செய்யவேண்டுமென்ற கோரிக்கை நியாயமானதே என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

தமிழகத்தில் விடுதலைப் புலிகளின் நடவடிக்கைகளை கட்டுப்படுத்தும் வகையில் தமிழகஅரசுசிறப்பாக நடவடிக்கை எடுக்திருப்பதாகவும் அவர் தெரிவித்தார்.

இதே நேரம் தமிழகத்தில் மற்றுமொரு தாக்குதலை விடுதலைப்புலிகள் நடத்த இருப்பதாக செய்திகள் வந்துள்ள நிலையில் அந்த இயக்கத்தை உடனடியாகத் தடைசெய்ய வேண்டுமென்றுஇந்திய ஐக்கிய பொதுவுடைமை கட்சியின் பொதுச் செயலாளர் மொஜிந்சென் மத்திய அரசைக் கேட்டுள்ளார்.

### தேர்தலுக்கான

னரின்பாதயாத்திரை அரசுக்கு ஒரு தலையிடியாக இல்லை. அதைச் செய்பவர்களுக்குத்

## சிறுகதைப் பயிற்சி பட்டறை நிறைவு

ஆரம்ப நிலையிலுள்ள சிறுகதை எழுத்தாளர்களுக்கும், எழுத ஆர்வம் கொண்டிருப்போருக்குமான பயிற்சிப் பட்டறை நேற்று நிறைவுபெற்றது. நிதர்சனம் நிறுவனத்தால் கடந்த பத்து வாரங்களில் ஒவ்வொரு சனிக்கிழமையும் நடாத்தப்பட்ட இப்பயிற்சிப் பட்டறையின் நிறைவும், கலந்துகொண்டோருக்குச் சான்றிதழ் வழங்கலும் நேற்று நிதர்சனம் பணிமனையில் இடம்பெற்றது.

பிரபல எழுத்தாளர்களான சொக்கன், செம்பியன்செல்வன், இராசநாயகம், கோகிலா மகேந்திரன் போன்றோரால் நடத்தப்பட்ட இப்பயிற்சிப் பட்டறையில் கலந்துகொண்டு பயிற்சியை நிறைவு செய்தவர்களுக்கான சான்றிதழ்களை விடுதலைப் புலிகள் இயக்கத்தின் மூத்த உறுப்பினர் திரு. இளங்குமரன் நேற்று வழங்கினார்.

## வீரமரண அறிவித்தல்

### கப்டன் உருத்திரா (பாவலன்)

மயிலிட்டியைச் சேர்ந்த சற்குணநாதனின் புதல்வன் ஜீவரட்ணம் (பாவலன்) 19-03-92 இல் மணலாற்றில் நடைபெற்ற நேரடிச் சண்டையில் வீர மரணத்தைத் தழுவிக் கொண்டார். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்களுக்கு அறியத்தருகின்றோம்.

பிலவத்தை
சித்தங்கேணி
(2312)

தகவல்:
பெற்றோர், சகோதரர்கள்
நண்பர்கள்

## ஓராண்டு நினைவஞ்சலி




ஆண்கள், பெண்களுக்கான ஆடைகளை
ஒரே இடத்தில் தைத்துக் கொள்ள

**அழகியல் தையல் நிலையம்**

73, பெரிய கடை
யாழ்ப்பாணம்

(சி 4083)


திருக்கோணமலை மாவட்ட
பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம்
வழங்கும்

**இலங்கைவேந்தன் தோன்றும்**
**வீரத்தாய்** (குறுநாடகம்)

யாழ் ஓசை கண்ணனுடன்



## மேஜர் சதா
### (நடராசப்பெருமாள் திலீப்குமார்)

வீரத்தாய் மடியில் 17. 01. 1971 — வீரத்தமிழ் மண்ணில் 22. 03. 1991

உதிரமதில் விடுதலையை கலக்க வைத்து
உள்ளமது கலங்காத வீரம்பெற்று
எதிரியது பாசறைகள் அழிப்பிலன்று
வீர சொர்க்கம் அடைந்து விட்ட வீரவேங்கை
வீரக்கல் நாட்டுகின்ற மேன்மை பெற்று
மேலான தமிழினத்தின் வீரம் நாட்டி
மலர்ந்து வரும் தமிழீழ மண்ணின் மீது
மக்களது மனத்தென்றும் வாழ்கவீர,

வரணி வடக்கு,
வரணி,

- குடும்பத்தினர்

(2316)

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் மகேந்திரா வீதி, 31 ஆம் இலக்கத்திலுள்ள 'ஈழநாதம்' பணிமனையில் 1992 - ஆம் ஆண்டு மார்ச் மாதம் 22 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

ஒரு தலையிடியாக இல்லை. அதைச் செய்பவர்களுக்குத்தான் வெயிலால் தலையிடி வரும் என்று நாம்கவலைப்படுகிறோம் என்றார்.

### இன்றைய

மாலை நான்கு மணி வரையும் அடையாள உண்ணாவிரதமும் மாலை ஏழு மணிக்கு விடுதலைப் புலிகள் இயக்க உறுப்பினர்களான நெடுங்கீரன், பதிவாணி, கடாபி மாஸ்ரர் ஆகியோர் கலந்து கொள்ளும் பொதுக் கூட்டமும் கலை நிகழ்ச்சிகளும் இடம் பெறவுள்ளன.

### மாணவர்

துணைபோகும் வகையில் செயற்படுவதுமான கேளிக்கை நிகழ்வுகள் இன்றைய போராட்டச் சூழலில் விரும்பத்தகாதது எனவும் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.

### எதிர்க்கட்சிப்

தம் ஆயிரக்கணக்கில் மக்கள் ஆதரவு பெருகி வருவதாகவும் தெரிவிக்கப்படுகிறது. இது தொடர்பாக அனுரா கருத்துத் தெரிவிக்கையில் இப் பாதயாத்திரைக்கு அரசும் பொலிசாரும் தொடர்ச்சியாகப் பல இடையூறுகளை ஏற்படுத்தி வருகின்ற போதிலும் அது மக்களின் ஒருமித்த ஒத்துழைப்பினால் முறியடிக்கப்பட்டு வருகிறது எனக் கூறியுள்ளார்.

### பதவி நீக்கும்

தானியர் காலத்தில் முடிக்குரியதாக இருந்த அனைத்து நிலங்களும் சிங்கள குடியேற்றவாசிகளுக்கு உரித்தாக்கப்பட வேண்டும் எனவும் வேண்டுகோள் விடுத்ததுடன் பௌத்தர்களை மதமாற்றம் செய்யும் நடவடிக்கைகள் சட்ட விரோதமானதெனப் பிரகடனம் செய்யப்பட வேண்டுமெனவும் கேட்டுக்கொண்டார்.

# பேரழிவு ஆயுதவிபரம் ஈராக் சமர்ப்பிப்பு

பேரழிவுகளை ஏற்படுத்தக் கூடிய ஆயுதங்கள் இன்னமும் தன்னிடமிருப்பதாக கூறி அவற்றின் பட்டியல் ஒன்றை ஈராக் ஐ நா. சபையிடம் கையளித்துள்ளது. எவருமே எதிர்பார்க்காத நிலையில் ஈராக்கின் இந்த அறிவிப்பு வெளியாகியிருப்பதாக அவதானிகள் கூறியுள்ளனர்

இரசாயன முறைகொண்ட ஆயுதங்கள் மற்றும் தொண்ணூறு ஸ்கட் ஏவுகணைகள் என்பனவும் இந்தப் பட்டியலில் இடம் பெற்றுள்ளன

மேலும் ஆயுதங்கள், ஆயுதம் தயாரிக்கும் திட்டங்கள் பற்றிய விபரங்களை ஐ நா. விடம் இன்னும் சில வாரங்களில் கையளிக்கவும் ஈராக் இணக்கம் தெரிவித்துள்ளது. அத்துடன் ஐ நா. பாதுகாப்பு சபையின் தீர்மானங்களுக்கு ஈராக் முழு ஆதரவும்தெரிவித்துள்ளது.

இதனையடுத்து ஐ. நா. பாதுகாப்பு சபையின் ஆயுத நிபுணர்களைக் கொண்ட குழுவொன்று பக்தாத்திற்கு புறப்பட்டுள்ளது.

### கல்வி

இந்த நியமனத்தை யாழ். கல்விப் பணிப்பாளர் இரா சுந்தரலிங்கம் கொழும்புக்குச் செல்லமுன் வழங்கிய பணிப்புரையில் 1988 இல் இருந்து செயற்படும்படியாக வழங்கியுள்ளார்.

இந்தப் புதிய நியமனத்தை முறைசாராக் கல்வி போதனாசிரியர் சங்கம் ஆட்சேபித்திருக்கிறது. சங்கம் கல்வி அமைச்சுக்கு அனுப்பிய மகஜர் ஒன்றில் புதிதாக நியமனம் பெற்றவர் எவ்வித தொழில்நுட்ப அறிவாற்றலும் அற்றவர் என்றும், அவரின் குணவியல்புகள் இப் பிரிவுக்கு மாசு கற்பிக்கும் என்பதை உணர்வதாலும், முன்பிருந்த நிரந்தர உதவிக் கல்விப் பணிப்பாளர் ச. சுப்பிரமணியம் அவர்களைத் தொடர்ந்து கடமையாற்ற அனுமதிக்கும்படி கோரியுள்ளது. இம் மகஜரில் அனைத்துப் போதனாசிரியர்களும் ஒப்பமிட்டுள்ளார்கள்.

நீண்டகாலமாக யாழ்ப்பாணத்தில் வளர்ந்தோர் கல்வித் திட்டம் ஐ நா. அகதிகள் புனர்வாழ்வு ஸ்தாபனத்தின் உதவியுடன் இயங்கிவருகின்றது இத்திட்டம் யாழ்ப்பாணத்தில் திறமையாகச் செயற்படுகின்றது என்று மாகாணக் கல்வி அமைச்சின் பாராட்டுதலைப் பெற்றுள்ள வேளையில் அதைச்சீர்குலைக்கும் அரசியல் நோக்குடனேயே மத்திய அமைச்சு செயற்பட்டுள்ளது என கல்வி வட்டாரங்களில் பேசிக் கொள்ளப்படுகின்றது.

### இனவாத

நிரம்பிய பஞ்சாட்சரம் சகிதரன் 1991 டிசம்பரில் 29-ம்திகதி வீட்டுக்கு திரும்பிச் செல்கையில் இனவாத குண்டர் கும்பல் ஒன்றினால் தாக்கப்பட்டு 1992 ஜனவரி மூன்றில் மரணமானார். பொலிஸார் இதுவரை கொலையாளிகளை கைது செய்யத் தவறி விட்டார்கள்.

கிழக்கு லண்டனில் மட்டும் இவ்வாறான பத்துக் கொலைகள் இடம் பெற்றுள்ளன.

இவ்வாறான தாக்குதல்களை நடத்துபவர்கள் பற்றிய தகவல்களை தரசகலரும் முன்வரவேண்டும்எனத் தமதுஅறிக்கையில் தெரிவித்துள்ளன.

யாழ் ஓசை கண்ணனுடன்
பிரபல கலைஞர்கள் இணைந்து
வழங்கும்

## இன்னிசை ராகம்

இடம்: பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கு
காலம்: இன்று காலை 10.00 மணிக்கும்
மாலை 2.30 மணிக்கும்.

பாதிக்கப்பட்ட மாணவர்களின் உயர்கல்வி மேம்பாட்டிற்காக இந்த நிதி திரட்டப்படுகிறது.

(2322)

## மரண அறிவித்தல்

### திருமதி ஆறுமுகம் கனகம்மா

புங்குடுதீவு 11ஆம் வட்டாரத்தைச் சேர்ந்தவரும், கொக்குவில் சந்தி கே. கே. எஸ். வீதி, இல. 73 ஆம் இலக்க இல்லத்தில் வசித்தவருமாகிய திருமதி ஆறுமுகம் கனகம்மா 21-03-92 சனிக்கிழமை காலமாகிவிட்டார்.

இவர் காலஞ்சென்ற நடராசா - தங்கம்மா தம்பதிகளின் அன்பு மகளும், காலஞ்சென்ற அம்பலவாணர் செங்கமலம் தம்பதிகளின் அன்பு மருமகளும், அன்னம்மா, மரகதம், இரத்தினம், இரஞ்சிதம், முத்துலெட்சுமி, கனகலிங்கம் (சந்திரபவான், கிளிநொச்சி) ஆகியோரின் அன்புச் சகோதரியும், காலஞ்சென்ற கதிரவேலு, குழந்தைவேலு, சொக்கலிங்கம் (மல்லாவி) காலஞ்சென்ற இராசலிங்கம், அன்னலிங்கம், கோணேஸ்வரி ஆகியோரின் மைத்துனியும், கமலாதேவி, புனிதாதேவி, ஜெகதேவி, கலைச்செல்வி, சிவலிங்கம் (ஜேர்மனி) ஆகியோரின் தாயாரும், காலஞ்சென்ற கனகசபாபதி, சண்முகநாதன், பரமசிவம் (நோர்வே), ஜெயரெத்தினம், குணமணி ஆகியோரின் மாமியாருமாவார். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
அ. ஆறுமுகம் [கணவர்]

[2323]